
# ஓர் நாள் இரவு




முத்து நாராயணன்.

# ஓர் நாள் இரவு?

(காதல் நாடகம்)



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

இராமச்சந்திரபுரம் : : புதுக்கோட்டை ஸ்டேட்

முதற் பதிப்பு: பெப்ரவரி 1948.

**No. 32** (நாடகம்)

ஔவை டி.கே. சண்முகம் நூலகம்,
வரிசை எண்: 211
இடை எண்: 211

உரிமை பதிவு

விலை: அணா பத்து
(தபால் செலவு தனி)

மதராஸ் ரிபபன் பிரஸ், இராமச்சந்திரபுரம்.

# முன்னுரை

மனித சமூகத்தின் இயற்கையை ஒளிவு மறைவின்றி உற்று நோக்குவார்க்கு, "**காதல் என்பது இயற்கையின் விதியே**" என்பது விளங்கும். ஆனால், தெரிந்தோ, தெரியாமலோ சிலர் காமத்தையும் காதலையும் ஒன்றாகவே கருதுகின்றனர். அந்தத் திரையை அப்புறப்படுத்துதற்கு இந்த நாடகம் துணை செய்யுமா வென்று சோதனை செய்யத் துணிந்தேன். உண்மையிலேயே, ஐம்புலனும் ஒன்றிய தன்மையில் காதல் என்ற முளை கிளம்புமாயின், அது மதம்-சாதி, நட்பு-பகைமை எதனையும் பொருட்படுத்தாது. காதல் இருவர் கருத்து ஒன்றுபட்டால், இடையே நேருகின்ற இடுக்கண் இமயம்போல் எதிர் நின்றாலுங்கூட, வெற்றியே அன்றி தோல்விக்கு இடம் சிறிதுமில்லை. இதனை நிரூபிக்கவே இந்நாடகம்.

"ஒரே மரத்தில் பல லட்சம் இலைகள் இருப்பதுபோல், ஒரே கடவுளின் அடிப்படையில்தான் பற்பல மதங்கள் காட்சி தருகின்றன" என்பது போன்ற பேருண்மைகளை இந்திய சமூகம் ஒப்புக்கொள்ளும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகவே, இலட்சியக் காதல் நாடகமாகிய இது தமிழ் நாட்டவர்க்குப் பெரிதும் பயன் தருமாறு வெளியிட முன்வந்த **கார்த்திகேயினி பிரசுரத்தாருக்கு** எனது மனமுவந்த நன்றி.

ராயவரம்
25—2—48

**முத்து நாராயணன்**
ஆசிரியர்

# பதிப்புரை

மகாத்மா காந்தியடிகளின் ஆத்மா சாந்தி நிலவ, இந்தியர் அனைவரும் ஒரே சமுகத்தினராகி விட வேண்டுமல்லவா? அதற்கு "ஓர் நாள் இரவு" போன்ற காதல் நாடகங்கள் இந்திய சமூகங்களை ஒரே இனமாக இணைக்க வேண்டு மென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அந்த ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநிறுத்த தமிழர் சமுகமும் பங்குகொள்ள வேண்டுமாயின், மதம் என்ற திரையைக் களைந்துவிட வேண்டும். அதற்குச் சரியான ஆயுதம் 'காதலை வளர்ப்பதுதான்' என்பதைச் சித்தரிப்பதே இந்நூல். இதனை ஆசிரியர் திரு. முத்துநாராயணன், தமது கற்பனை உள்ளத்தினின்றும் சரித்திர வடிவம் கொடுத்து, எளிய இனிய நடையில் தீட்டியிருக்கிறார். ஆகவே படிக்கப் படிக்க உள்ளத்தில் உண்மையொளி வீசச் செய்கின்ற இச்சிறு நாடகத்தைத் தமிழகம் நன்கு வரவேற்குமென நம்புகின்றோம்.

ராமச்சந்திரபுரம்
25—2—48

கார்த்திகேயினி பிரசுரம்

# ஓர் நாள் இரவு?

## அங்கம். 1

### காட்சி. 1

[இடம்: பாதுஷாவின் அரண்மனை — நிகழ்ச்சி: ஓர் அறையில் வீரன் பஜாஜி சிறை வைக்கப்பட்டிருக்கிறான் — — நடு நிசி — — இரவெல்லாம் தூங்காது பஜாஜி எதையோ சிந்தித்துக் கொண்டிருக்கிறான் — — எங்கும் நிசப்தம். அனார்கலி (மெதுவாக அங்குமிங்கும் திரும்பிப் பார்த்துக்கொண்டே, பஜாஜி சிறை வைக் வைக்கப்பட்டிருக்கும் அறையை அடைகிறாள்.]

அனார்கலி :—பஜாஜி !

பஜாஜி :—(திடுக்கிட்டுப் பயந்தவாறு) யார்? என்ன?

அனார்கலி :—தெரியவில்லையா ? நான் தான், அனார்கலி !

பஜாஜி :— அனார்கலியா ! .... .... சென்று விடு, நிற்காதே; நம் இருவருக்கும் ஆபத்து.

அனார்கலி :—(சிரித்துக்கொண்டே) போதும் ! (அதிகார தோரணையில்) என்னையா நிற்க வேண்டாமென் கிறீர்கள் ?........எனக்கா ஆபத்து ? (ஏளனமாக) பகதூர் ! தாங்கள் எங்கிருக்கிறீர்கள் ?

யாருடைய பாதுகாப்பில் ?.... சற்று யோசித்துப் பாருங்கள்.

பஜாஜி :—(நகைத்தவாறு) ஆம்.......தெரியும்....... இது பாதுஷாவின் அரண்மனை. உள்ளே நான்! வெளியே நீ! பாதுஷாவின் அருமை மகள்; இந்நாட்டின் இளவரசி! போதுமா? இன்னும் ஏதேனும் சொல்ல வேண்டுமோ?

அனார்கலி :—(புன் சிரிப்புடன்) போதும், போதும், வேண்டாம்.

பஜாஜி :—அனார்கலி! என்ன? இந்த நடுநிசியில் இப்படி.............

அனார்கலி :— காரணம்! இன்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. எதையோ நாடுகிறது மனம். ஏதோ ஒரு சக்தி தங்களிடம் இழுத்து வந்தது.

பஜாஜி :—அனார்கலி! விளையாடாதே! ஏதேனும் உளவு அறிந்து போக வந்தாயோ?

அனார்கலி :—ஆம்; உளவுதான். தங்களிடம் ஒரு மருந்து! எங்கும் கிடைக்காத மருந்து! என் வியாதியை தீர்க்கும் மருந்து! அது கிடைக்குமா என்று உளவு அறியவே வந்தேன்.

பஜாஜி :—ஆ! என்ன விந்தை! மருந்து கிடைக்குமா என்று உளவு அறிய வந்தாயா? அறிந்தேன் உன் எண்ணத்தை; அறிந்தேன்....... ஆனால்...........

அனார்கலி :—ஆனால் என்ன?

பஜாஜி :—ஆனல் என்னவா? நானே க்ஷத்திரியன், ........ரணசண்டியின் உபாசகன். வாளே என் ஜீவன்......யுத்தமே என் முடிவு...... யுத்தத்தில் புறமுதுகு காட்டி ஒடாது மடிவதே என் லட்சியம். நீ நல்ல அழகி. உன் ஹிருதயத்தில் அன்பெனும் ஆறு அணை கடந்து ஓடுகிறது! உனது சந்திர பிம்ப முகம் ஜோதியாய் விளங்குகிறது. உனது தேகம் செளந்தர்யத்தில் மாறுபட்டு சந்தோஷத்தில் பூரித்திருக்கிறது. ஆனல்?

அனர்கலி :—மனம் என்று கேட்கிறீர்களா?

பஜாஜி :—இல்லை....என் இருதயத்தில்....

அனர்கலி :—இருதயத்தில் என்ன?

பஜாஜி :—என் இருதயத்தில் உனக்கு இடமில்லையே என்று தான் . ...

அனர்கலி :—இடமில்லையா?........நிச்சயமாக! உங்கள் இருதயத்தில் எனக்கு இடமில்லையா?

பஜாஜி :—ஆம். பாரத நாடு பகைவர்களால் மிதியுண்டு நசுங்குகிறது. பாலர்கள் முதல் முதியோர் வரை உயிரை தியாகம் செய்ய முன்னணியில் நிற்கிறார்கள். சத்திரபதி........மலை மன்னன் சிவாஜியின் அடிமை........வேலையாளரில் ஒருவன்........ நான் மட்டும்,........தேசத்தை மறந்து சத்ருவின் மகள் வசப்பட்டு, மோகமென்னும் மாய வலையில் சிக்கி, தேசத் துரோகம் செய்வதா?........ஒருக்காலும் முடியாது. உண்மையாக முடியாது. நீ என்னை மறந்து, மன்னித்து விடு.

அனார்கலி :—(இரக்கத்தோடு) பஜாஜி! நான் உம் பகைவனின் மகள் தான். ஆனால் நான் உமது விரோதி யில்லை. இந்த உடல், நீர் நினைப்பது போல் விரோதியின் மகளின் உடலாக இருக்க லாம். ஆனால்........என் இருதயம், பரிசுத்தம் வாய்ந்தது; உமக்கென்று அர்ப்பணிக்கப் பட் டது. இது உண்மை........சத்தியம்.

பஜாஜி :—அனார்கலி! உன் மனம் பரிசுத்தமாக யிருக்கலாம். உன் பேச்சு உண்மையாய் இருக்க லாம். என் மனம் ஏற்க வேண்டாமா?

அனார்கலி :—என்னைத் தள்ளி விடாதீர்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன் டெல்லிக் கோட்டையைக் கொள்ளையிட வந்தபொழுது, தங்களைப் பார்த் தேன்! என் மனதையும் அன்றே உங்களிடம் கொள்ளை கொடுத்தேன்.

பஜாஜி :—இருக்கலாம். நிஜம் தான்; நானே கொள்ளை அடிப்பவன், கொள்ளைக்காரன். அப் படி இருந்தும், நீ என்னை விரும்புவது அழகா?

அனார்கலி :—நானும் அதைத்தான் சொல்கிறேன். அன்றே என் மனதை கொள்ளை கொண்டு விட் டீர்களென்று.

பஜாஜி :—திரும்பத் திரும்ப அதையே சொல் கிறாயே.

அனார்கலி:—பஜாஜி! நான் சத்துருவின் மகள்தான். ஆனால் ஒன்று; சத்துருவின் ஆட்களெல்லாம் சத்துரு ஆவார்களா? சத்துருவாக எண்ணுவது தங்கள் போன்ற வீரர்களுக்கு அழகாகுமா? அவ் விதம் நினைப்பது நியாயமா?

பஜாஜி :—நீ சொல்வதில் பிழை இல்லை. ஆனால் எனது முதல் நோக்கம் தேசத்தின் சுதந்திரம்....தாய்நாட்டின் விடுதலை, பின்பு தான் தர்மம், நியாயம், காதலெல்லாம். (வருந்தியவாறு) ஆம்; இன்று நான் சுதந்தர மற்றவன், அடிமை, பகைவனால் சிறை செய்யப்பட்டவன்.

அனார்கலி :—பஜாஜி! அதெல்லாம் எனக்கும் தெரியும். என்று நான் தங்களை கண்டேனோ, உங்கள் பால் மனம் கொண்டேனோ, அன்றிருந்து நான் தங்களின் அடிமை; அந்த க்ஷணம் முதல் உங்களுக்காக, உங்கள் கொள்கைக்காக, என் உடல் பொருள் ஆவியைத் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறேன். தேசம் விடுதலை அடையட்டும். பின்னர் நம் அன்பு, காதல் ஜோதியாக விளங்கட்டும்.

பஜாஜி :—ஆம்; சுதந்தரம் பெற்றபின் சுகமுறுவோம்.

அனார்கலி :—என் மனம் குளிர்ந்தது. இனி இவ்வுலகில் வேறெதுவும் வேண்டேன். தங்களின் சுகமே என் பாக்கியம். நாளை இந்நேரத்திற்கு வருகிறேன் ; பிறகு நடக்கவேண்டியதை சிந்திப்போம். அதிக நேரமாகிவிட்டது; சென்று வருகிறேன். நாளை தயாராய் இருங்கள்.

பஜாஜி :—சரி, சென்றுவா.

[அனார்கலி சென்று மறைந்தாள்]

பஜாஜி :—ஆகா! என்ன அழகு? ஆடவரை மயக்கி அடிமை கொள்ளும் கண்களும், முல்லைச்சிரிப்

பும், சுந்தர வடிவமும், சொல்லின் இனிமையும்! அவள் என் ஆருயிர், என் ஜீவன்.

[கோழி கூவுகிறது. பொழுதும் விடிந்தது.]

பஜாஜி :—இன்று நிச்சயம் வருவாள். இங்கிருந்து எப்படியும் தப்பிக்க வழியும் கொண்டு வருவாள். பின்னர் பார்த்துக்கொள்வோம்.

## அங்கம். 1

### காட்சி. 2

[இடம்: டெல்லி பாதுஷாவின் அரண்மனை, தர்பார்.]

பாதுஷா :—மந்திரி! பஜாஜி நம் வழிக்கு வந்தானா? எப்படி இருக்கிறான்?

மந்திரி :—மகராஜ்! அவன் பூனைக்குட்டிபோல் அடங்கி ஒடுங்கி இருக்கிறான். போகப்போக நம் வழிக்கு வந்துவிடுவான்.

பாதுஷா :—சபாஷ்! அவனை சிறைப்படுத்தியது எப்படி? சிங்கமாம் சிங்கம்!

மந்திரி :—சிங்கமா? இல்லை, அவன் பூனை.

பாதுஷா :—அவன் வீரமெல்லாம் இந்த பாதுஷாவிடமா பலிக்கும்? (பல்லைக் கடித்துக்கொண்டு) இத்தனை நாள் சிறையில் கிடந்து வாடியும் இன்னும் மனம் மாறவில்லை அவனுக்கு. எத்தனை நாளைக்குத்தான், பார்க்கலாம்.

மந்திரி :--ஆம்; இன்னும் சில நாளில் அவன் நம் வழிக்கு வந்துவிடுவான்.

பாதுஷா :—என் எண்ணமெல்லாம் நிறைவேருமல் போனல், அவனை கைதி செய்ததின் பலன்தான் என்ன? இருந்தாலும் பஜாஜியின் அறிவும், ஆற்றலும், வீரமும், அவன் அரசியல் நடத்தும் திறமையும், பிறரை வசியப்படுத்தும் பேச்சும், என்னையே கோழையாக்கி விட்டனவே. இனி அவனைக் கேட்பதில் பிரயோசனமில்லை.

மந்திரி :—கடைசி முறையாக வேண்டுமானல் கேட்டு வருவோம்.

பாதுஷா :—இருக்கட்டும்; நாளை கவனித்துக்கொள் ளலாம்.

[சேவகன் ஒருவன் வருகிருன்]

சேவகன் :—(பாதுஷாவை வணங்கி) மகாராஜா! ஒரு செய்தி..........!

பாதுஷா :—என்னடா.... சொல் சீக்கிரம்.......?

சேவகன் :—மகராஜ்! சொல்ல நா கூசுகிறது.......

பாதுஷா :—சிவாஜியின் ஆட்கள் மீண்டும் வந்தார் களா?

சேவகன் :—இல்லை, மகராஜ்!

பாதுஷா :—பின் என்ன? சொல் சீக்கிரம்.......

சேவகன் :—நேற்றிரவு நடந்த ஒரு சங்கதி......!

பாதுஷா :—சங்கதி என்ன?

சேவகன் :—அந்த அறையில், சிறையிலிருக்கும்....

பாதுஷா :—என்ன அந்த அறையில்? சிறையி லிருக்கும் கைதி தப்பி விட்டானா?

சேவகன் :—இல்லிங்க..........!

பாதுஷா :—பின் ?

சேவகன் :—அந்த ஆளோடு நம்ம.......

பாதுஷா :—என்னடா? நம்ம.......

சேவகன் :—இளவரசி.......

பாதுஷா :—என்ன இளவரசியா! .. பேசிக்கொண் டிருந்தாளா ?

சேவகன் :—ஆமாங்க !

பாதுஷா :—இது உண்மையா ?

சேவகன் :—விசாரிச்சுப் பாருங்க எஜமான்.

பாதுஷா :—சரி போ !

[மந்திரியைப் பார்த்து]

பாதுஷா :—மந்திரி ! கேட்டீரா....காரியம் கெட்டு விடும் போலிருக்கிறதே ! எவ்வளவு துணிச்சல்? என் உத்தரவையும் மீறி, அதுவும் நம் அனார்கலி.......

மந்திரி :—கொஞ்சம் பொறுங்கள், கோபம் வேண் டாம். சிறு குழந்தைதானே! கண்டித்து விட் டால் போகிறது.

பாதுஷா :—நன்றாய் இருக்கிறது உமது யோசனை. அந்தச் சண்டாளி, முகலாய வம்சத்திற்கே இழுக் குண்டாக்கி விட்டாளே. (கோபமாக) இதோ பாரும், இந்த வாளுக்கு அவளை இரையாக்கு கிறேன்.

மந்திரி :—அவசரப்பட வேண்டாம் அரசே! தீர விசாரித்துச் செய்யலாம்.

பாதுஷா :—அன்றே அந்த பஜாஜி தலை, பூமியில் உருண்டிருந்தால்....இன்று இப்பழி வருமா?

[சேவகனைப் பார்த்து]

நீ சென்று சீக்கிரமாக இளவரசியை, நான் அழைப்பதாக அழைத்து வா.

[சேவகன் செல்கிறான். திரையும் விழுந்தது]

## அங்கம். 1

### காட்சி. 3

[இடம் : அந்தப்புரம். நிகழ்ச்சி : அனார்கலி மஞ்சத்தில் அமர்ந்து தன் காதலனை நினைத்து உருகுகிறாள்]

அனார்கலி :—(தனக்குள்) "என்ன அழகு! என்ன முக வசீகரம்! அவர் பேச்சுத்தான் என்னே! ஒவ்வொரு வார்த்தையும், 'தியாகம், தியாகம்' என்று ஒலிக்கிறது. சுத்த வீரர் என்றால் இவர் தான். என் தந்தை....பேடி, என்ன? இந்த ஒரு மனிதனை பல பேர்களைக்கொண்டு நய வஞ்சகமாக அல்லவோ சிறை செய்தார். மேலும் இவரை தன் சேனாதிபதியாக்க வேண்டுமாம்! அடிமையாக்க நினைக்கிறார், தன்னலப் பிரியர், கொடுங்கோலர்" [சேவகன் வருகிறான்]

சேவகன் :—அம்மணி! பாதுஷா அழைக்கிறார்.

அனார்கலி :—என்னையா? இதோ வருகிறேன்.

[இருவரும் செல்கின்றனர்]

# அங்கம். 1

## காட்சி. 4

[இடம்: தர்பார்]

அனார்கலி:—பாவா! என்னை ஏன் அழைத்தீர்கள்? (முகத்தைப் பார்த்து) என்ன பாவா! என்று மில்லாத வருத்தமாகக் காணப்படுகிறீர்களே? கண்கள் ஏன் இப்படிச் சிவந்து போயின? ஜுரமா? (தந்தையைத் தொட்டுப் பார்க்கிறாள்)

பாதுஷா:—(கோபமாக) தொடாதே! விஷப் பாம்பே! நீயொரு குற்றவாளி!

அனார்கலி:—குற்றவாளியா! நானா? என்ன குற்றம் செய்தேன்?

பாதுஷா:—குற்றமா? இல்லை, குலத் துரோகம்; குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பே........!

அனார்கலி:—என்ன? நான் குலத்துரோகியா?

பாதுஷா:—ஆம்; (பல்லைக் கடித்துக் கொண்டு) ஆம். நீ குலத் துரோகிதான். நேற்று இரவு பஜாஜியின் அறையில் என்ன செய்தாய்?

அனார்கலி:—(ஒன்றும் அறியாதவள்போல்) என்ன செய்தேன்? ஒன்றுமில்லையே. இப்படி எல்லாம் கேட்காதீர்கள். நீங்கள் கோபமாயிருக்கிறீர்கள்; சரி, பிறகு வருகிறேன்.

[போக எத்தனிக்கிறாள்.]

பாதுஷா:—நில். போகாதே. இதோ பார்! எல்லாக் குற்றங்களுக்கும் மன்னிப்புண்டு. ஆனால், துரோ

கம் செய்தவர்களுக்கு மட்டும் இடம் கிடையாது. யார் செய்தாலும் சரி, அவர்கள் ஒருபோதும்.... என் கை வாள்....இந்தக் கை வாளுக்குத் தப்ப முடியாது.!

அனார்கலி :—நான் யாரையும் துரோகம் செய்ய வில்லையே!

பாதுஷா :—தன் குற்றம் தனக்குத் தெரியுமா?

அனார்கலி :—நான் குற்றவாளி அல்ல. ஆனல்.......

பாதுஷா :—ஆனல் என்ன?

அனார்கலி :—நான் பஜாஜியைக் காதலிக்கிறேன்!

பாதுஷா :—(பல்லைக் கடித்துக்கொண்டு) காதலிக் கிருயா! அதுவும் நம் துரோகி பஜாஜியையா? அது துரோகமாக உனக்குத் தோன்றவில்லை?

அனார்கலி :—(அழுதவாறு) பாவா!

பாதுஷா :—என்ன சாகசம்! இதை எல்லாம் எங்கு கற்ருய்.......அனார்கலி?

அனார்கலி :—பாவா! உங்கள் பெண் அல்லவா நான்.

பாதுஷா :—ஆம். அதனல் என்ன? உன்னைப் போல் ஆயிரம் பெண்களை இந்த வாளுக்குப் பலி யிடுவேன். அதனல் ஆனந்தம் கொள்வேன். அதுபோலவே என் குடும்பத்தில் குற்றம் ஏற்பட ஒருநாளும் சம்மதியேன்.......!

அனார்கலி :—பாவா! நான் தாயில்லாக் குழந்தை யல்லவா! தாங்கள் தானே என்னைப் போற்றி வளர்த்தீர்கள். (பாதுஷாவின் கால்களைப் பிடித்

துக்கொண்டு) இவ்விதமெல்லாம் கூற, தங்களுக்குமனம் வருகிறதா? தயை செய்யுங்கள்.

[அழுகிருள்]

பாதுஷா:—(கோபமாக) காலை விடு; வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற் போல் ஆச்சு. உன்னை வளர்த்த பாசம் ஒரு புறம் வாட்டுகிறது; மற்ெருரு பக்கம் களங்கத்தைக் கண்டு கடுஞ்சினம் கொள்கிறது. அனார்கலி! ஒன்று சொல்கிறேன், அதன்படி நடப்பாயா?

அனார்கலி :—நடந்து பார்க்கிறேன்.

பாதுஷா :—நீ நிச்சயமாக பஜாஜியைக் காதலிக்கிருயா?

அனார்கலி :—ஆம்.

பாதுஷா :—அவனை நீ மணக்க வேண்டுமல்லவா?

அனார்கலி :—ஆம்.

பாதுஷா :—சரி, உன் வாழ்க்கை பஜாஜியின் கையில் தானே இருக்கிறது!

அனார்கலி :—தாங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!

பாதுஷா :—விளங்காது தான். நீ பஜாஜியை அடைய விரும்பினுல், அவனை இஸ்லாமிய மதத்தில் சேரச் செய்.

அனார்கலி :—ஐயோ! அது மிகக் கடினமாச்சே.

பாதுஷா :—ஆம், கடினம்தான். இதை நிறைவேற்றத் தவறினுல், உன் காதலும் நிறைவேருது.

நீயும் உயிருடன் இருக்க முடியாது. ஒன்று நம் குலத்துக்கு நன்மை செய்; அல்லது நீ 'துரோகி' என்று இந்த வாளுக்கு இரையாகு.

அனார்கலி :—பாவா!

பாதுஷா :—ஒன்றும் என் காதில் ஏறாது. நிறைவேற்று, பின்னல் வேண்டியதைச் செய்கிறேன். நாளைக் காலைக்குள் எனக்கு முடிவு தெரிவிக்க வேண்டும்.

அனார்கலி :— கடினமான கட்டளை! முயற்சிக்கிறேன். ஆண்டவன் விட்ட வழி யாகட்டும்.

பாதுஷா :—உன் வேதாந்தத்தைக் கேட்க, சமயமில்லை; சென்று வா.

[அனார்கலி விம்மி விம்மி அழுதுகொண்டே செல்கிருள்]

## அங்கம். 1

### காட்சி. 5

[இடம்: அந்தப்புரம். நிகழ்ச்சி: அனார்கலி விம்மி விம்மி அழுதவாறு மஞ்சத்தில் படுத்திருக்கிருள். தோழி ஒருத்தி அங்கு வருகிருள்.]

தோழி :—இளவரசியே! என்னம்மா உடம்புக்கு?

அனார்கலி :—(விம்மல்) ஒன்றுமில்லை.

தோழி :—இன்று ஏன் சாப்பிடக்கூட இல்லை!

அனர்கலி :—சாப்பாடா? சாப்பாடும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்.

தோழி :—அழாதேயுங்க அம்மா, உடம்பு இளைச்சுப் போயிடும்.

அனர்கலி :—(துடுக்காக) அதைப்பற்றி உனக்கேன் கவலை?

தோழி :—என்ன அம்மா, இப்படிச் சொல்ரேங்க! நான்தானே, தாங்கள் சிறு குழந்தையாக இருந்தது முதல் பழகி வருகிறேன். என்னைத் தவிர உங்களுக்கு உற்ற தோழி யாரம்மா?

அனர்கலி :—ஆம், என் விதியை உன்னிடம் சொல்லிப் பயன்?

தோழி :—சும்மா சொல்லுங்கள், எனக்கு ஏதேனும் வழி தெரிந்தால் சொல்லுகிறேன்.

அனர்கலி :—உன்னுடைய குணமெல்லாம் எனக்குத் தெரியும். இருந்தாலும் என் வருத்தத்தை உன்னால் தீர்க்க முடியாது. உன் உபாயங்களும் அதற்குப் பிரயோசனம் இல்லை.

தோழி :—பிரயோசனமில்லையா? இன்று அரச சபையில் நடந்ததுதானே அம்மா!

அனர்கலி :—ஆம், அதுஎப்படி உனக்குத் தெரியும்?

தோழி :—எனக்கா தெரியாது? அன்று இரவுகூட தாங்கள்........

அனர்கலி :—போதும் நிறுத்து, "எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல்". எங்கள்

காதல் தெய்வீக மானது! அது மறையப் பார்க்கிறது.

தோழி :—அப்படி இல்லை அம்மா, அதுவளர்கிறது.

அனூர்கலி :—வளர்கிறதா? அவர் முகமதியரானல் அல்லவா!

தோழி :—முகமதியர் இல்லையா! பின்?

அனூர்கலி :—அவர்.......ஹிந்து,.....மகாராஷ்டிரர்.

தோழி :—மகாராஷ்டிரரா! அப்ப, எனக்கு என்னமோ பயமாத் தானிருக்கு.

அனூர்கலி :—நான் அவரை நாளைக் காலைக்குள் முஸல்மானுக்கா விட்டால், அவர் உயிர் முன்னே போகும்.

தோழி :—அதன்பின் தங்கள் உயிர் போகுமாக்கும். நன்ருயிருக்கிறது, தங்கள் காதல்.

அனூர்கலி :—அதெல்லா மிருக்கட்டும், இப்போ என்ன செய்யலாம்?

தோழி :—என்னைக் கேட்டால்.......? அது தங்களுக்கும் தங்கள் காதலருக்கும் தான் தெரியும்!

அனூர்கலி :—இப்படி எல்லாம் கேலிக்கும், வீண் பேச்சுக்கும், இதுவா சமயம்?

தோழி :—இளவரசியே! அவரோ மகாராஷ்டிரர் என்கிறீர்கள். நிச்சயமாக அவருக்கு உங்கள்மீது அன்பிருந்தால், காதல் இருப்பின், உடனே முகமதியராகி, உங்கள் உயிரைக் காப்பார். பயப்பட வேண்டாம்; மகாராஷ்டிரர்கள் காருண்யம் உள்ளவர்கள்.

அனார்கலி :—உண்மையில் அவர் அன்பாகத்தான் இருக்கிறார்.

தோழி :—காதல் என்பது சாமானியமானதல்ல. எத்தனையோ இளவரசிகளும் இளவரசர்களும் காதலுக்காக உயிரையே தியாகம் செய்திருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ பேர்கள் சுக வாழ்வையே அர்ப்பணம் செய்தும் இருக்கிறார்கள். அப்படி இருக்க, உங்கள் காதலர் மதம் விட்டு மதம் மாறுவதற்கு தயங்குவாரா?

அனார்கலி :—எங்கள் காதல் தெய்வீகமானது, மாசற்றது, அன்பின் சிகரம். அது உடல் பொருள் ஆவியைக் கடந்தது. அதற்கிணை அதுவேதான். (தோழியைப் பார்த்து) நீ படுத்துறங்கு; நான் அவரிடம் செல்கிறேன்.

தோழி :—ஆண்டவன் காப்பாற்றுவான். அவனை நம்புங்கள். நான் சென்று வருகிறேன்.

[தோழி செல்கிறாள், திரையும் விழுகிறது]

## அங்கம். 1

### காட்சி. 6

[நிகழ்ச்சி : பஜாஜி அனார்கலியை எதிர் நோக்கி நிற்கிறான். மணி பனிரெண்டு; எங்கும் இருள்சூழ்ந்து நிற்கிறது. அனார்கலி விரைந்து சிறையை நோக்கி வந்துகொண்டிருக்கிறாள்]

பஜாஜி :—(சிறைக்குள் தனிமையாக) ஏன் இன்னும் அவளைக் காணோம்? நேற்று அவள் இங்கு

வந்ததை பாதுஷா அறிவானு? இன்று தப்புவ தற்கு வழியல்லவா அவள் கொண்டுவரவேண்டும்! இந்த விட்டு வெளியேறினல் இனி நம்மை அந்த நய வஞ்சகன் பிடிப்பதைப் பார்க்கலாம். என்ன ....ஒருவேளை நாம் நேற்று நினைத்ததுபோல் அனர்கலி உளவறிய வந்திருப்பாளா? என்ன மடமை! ஒருக்காலும் இருக்காது. அவள் என் பால் தன் உயிரையும் தியாகம் செய்யும் உத்தமி யல்லவா? அவள் காதல் மாசற்றது,.......தெய்வீக மானது. .......... ஏதோ சப்தம் கேட்கிறதே! அவள் தான் வருகிருள்: அனர்கலி! அனர்கலி! என்ன பேச்சு மூச்சில்லை? ஏன் மௌனம்? என் மேல்கோபமா? நான்தான் தயாராயிருக்கி றேனே.

அனர்கலி :—(விம்மல்)

பஜாஜி :—என்ன? ஏன் அழுகிருய்? என்ன நேர்ந்தது? சொல் சீக்கிரம். அவர்களை சின்ன பின்னம் ஆக்கி விடுகிறேன்.

அனர்கலி :—சுவாமி, அப்படி ஒன்றுமில்லை. என் பாவா...........

பஜாஜி :—உன்பாவா! அந்த நயவஞ்சகன் நீ இங்கு வந்ததை அறிவானு? என்ன சொன்னன்?

அனர்கலி :—(அழுகிருள்)

பஜாஜி :—சொல், அதனல் பாதகமில்லை.

அனர்கலி :—அது மிகவும் பயங்கரமானது. நான் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு நிற்கி றேன். (விம்மல்)

பஜாஜி:—எது பயங்கரமானது? நீ ஏன் தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொள்ள வேண்டும்? அழாதே, அதைத் தீர்த்து விட்டால் போகிறது.

அனார்கலி:—உண்மையாகவா?

பஜாஜி:—ஆம். மகாராஷ்டிரன் முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டான்.

அனார்கலி:—(வருத்தமாக) நன்று. ஆனல் அதைத் தங்களிடம் சொல்ல நாவெழ வில்லை.

பஜாஜி:—நான் ஒருபோதும் சொன்ன சொல் தவற மாட்டேன். பயத்தை விடு.

அனார்கலி:—சொன்னல் தங்களுக்கு..........

பஜாஜி:—எனக்கென்ன? எது வரினும் அஞ்சேன். தைரியமாகச் சொல்.

அனார்கலி:—இந்த அடிமைக்காக தாங்கள்.......

பஜாஜி:—என்ன செய்ய வேண்டும்?

அனார்கலி:—முஸல்மானக.......

பஜாஜி:—அனார்கலி! விளையாடுகிருயா? அல்லது இது உன் சோதனையா?

அனார்கலி:—என் தந்தையின் கட்டளை..........

பஜாஜி:—உன் தந்தை! கட்டளை! நன்று; நீயும் உடன்பட்டுத் தானே?

அனார்கலி:—(மௌனம்)

பஜாஜி:—ஏன் மௌனம்? நம் காதலை மறந்தாயா? அல்லது இதுவும் சூழ்ச்சிகளில் ஒன்ரு....நய வஞ்சகி?

அனார்கலி :—சுவாமி! சூழ்ச்சியுமல்ல, வஞ்சகமும் அல்ல.

பஜாஜி :—பின் என்ன ?

அனார்கலி :—நான், தங்களை மனமாரக் காதலிக்கிறேன்.

பஜாஜி :—காதல்! இந்தக் காதல் யாருக்கு வேண்டும்? உன்மேல் குறையில்லை; என் முன் யோசனைக் குறைவு. இம்மாதிரி உள்ளம் படைத்த பெண்ணின் நட்பு எனக்குத் தேவை இல்லை.

அனார்கலி :—உண்மையாய், சொல்கிறேன், அல்லா மீது ஆணை. (விம்மியவாறு) என் பாவா, நீங்கள் முசல்மானுகாவிட்டால் நம்மிருவரையும் சேர்த்து பலியிடுவதாக..........

பஜாஜி :—சே, இவ்வளவுதானு? பேடி! அவனும் ஒரு முசல்மான் தானு?

அனார்கலி :—நீங்கள் அதற்கு உடன்பட்டால் உடனே விவாகம் நடக்கும் என்றும் சொன்னுர்.

பஜாஜி :—அனார்கலி! சுதந்திரத்தை நிலை நிறுத்தவும், தர்மத்தைக் காக்கவும், என் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்யத் தயாராயிருக்கும் எனக்கு, இம்மாதிரியான அற்பக் காரியங்கள் பிடிக்காது. இதற்கு ஒருக்காலும் இணங்க மாட்டேன்.

அனார்கலி :—நான் மட்டும்? தாங்கள் தேசத்திற்கும் தர்மத்திற்கும் தியாகம் செய்தால், நான் காதலுக்காக இந்த உடலை அர்ப்பணம் செய்யத் தயார்.

பஜாஜி :—போதும், உன் பசப்பு வார்த்தைகள்.

அனார்கலி :—ஆ! தாங்கள், இன்னும் என்னை இவ்விதம் நினைக்கலாமா? (அழுகிறாள்) நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒன்று.

பஜாஜி :—ஒன்று, என்ன ஒன்று?

அனார்கலி :— (விம்மியவாறு) கோபம் வேண்டாம்; சற்று பொறுமை காட்டுங்கள். இதற்கு முன் ' அனார்கலி! உன்னைக் காதலிக்கிறேன் ' என்று தாங்கள்...........

பஜாஜி:—ஆம், அப்பொழுது மோசம் போனேன்: நீ ஒரு சண்டாளி என்பதை அறியேன்.

அனார்கலி :—ஆம், நான் சண்டாளிதான். இதோ இந்த வாள்........என்னைத் தங்கள் கரத்தாலேயே .......(விம்மல்)

பஜாஜி :—உம்.......

அனார்கலி :—பஜாஜி! என்று உங்கள் கரங்கள் ' காதலி ' என்று கட்டித் தழுவ, படபடத்ததோ, அதே கரத்தால் இன்று இந்த அடிமையை வெட்டி விடுங்கள்; அதையே நான் காதலின் இன்பமெனக் கொண்டு சாந்தி அடைகிறேன்.

பஜாஜி :—அனார்கலி!....... என் தலை சுழல்கிறதே. ஆ, என் மனம் குழம்புகிறது! உனக்கு பதில் சொல்ல நா நடுங்குகிறது. நீ சென்று.......

அனார்கலி :—ஒருக்காலும் இல்லை. காதல் இன்றேல் சாதல்: இரண்டில் ஒன்றுதான் என் முடிவு.

பஜாஜி :—நான் என்ன செய்யவேண்டுமென்பதே புலப்படவில்லை. இதன் முடிவை நாளை சொல்கிறேன்.

[(தனக்குள்) நானே ஒரு கைதி; ஆனால் சிவாஜியின் அடிமை. நாட்டின் ஊழியன். நம்மை இந்தியத்தாய் நம்பி இருக்கிறாள். ஆனால், என்பால் காதல் கொண்ட பெண்ணும் நானும் இன்றுடன் அழிவதில் யாருக்கு நன்மை? நம் முகம்மதியன் ஆனால் என்ன? நம் கடமையைச் செய்ய வேண்டியது தானே? ஒன்று நான் கொடுத்த வாக்கு; மற்றொன்று நாட்டின் க்ஷேமம். ஒருபுறம் காதல், மற்றொரு புறம் ஜீவ காருண்யம்.]

பஜாஜி :—தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டேன். உன் பாவா விடம் ஒருநாள் தவணை வாங்கி வா.

அனார்கலி :—ஐயோ! அவர் முன்பே சொல்லி விட்டாரே........நாளைக் காலை, சூரியோதயத்திற்குள் என்று. என்ன செய்வது? உங்கள் இஷ்டப்படி நடக்கிறேன். நடப்பது நடந்து தானே தீரும். நம் அதிர்ஷ்டம் நல்லதாயிருந்தால் வாழ்வோம்; அல்லது மாள்வோம். வருகிறேன்.

(சிறிது தூரம் செல்கிறாள்)

பஜாஜி:—அனார்கலி! போகாதே நில். உன் தந்தையிடம், "நான் முஸல்மானாகத் தயார்" என்று சொல். கண்மணி! இதோபார். இப்போது நாம் இருக்கும் நிலையில் நம் கடமையை நிறைவேற்ற

இயலாதுபோனல் மடிய வேண்டியதுதான். அதனுல் யாருக்கும் பயன் இல்லை. உன் தந்தையிடம் நான் முஸல்மானகத் தயார் என்று சொல்.

அனார்கலி :—பஜாஜி ! உண்மையாகவா ?

பஜாஜி :—இன்னும் என்ன சந்தேகம்? நம் காதலுக்கு முன், வேறு எதுவும் இடம் பெருது.

அனார்கலி :—நாதா ! நான் சென்று, தந்தையிடம் தெரிவிக்கட்டுமா ?

பஜாஜி :—இன்னும் சூரியன் உதிக்கவில்லை. அவர் கூறியபடி, காலையிலேயே தெரிவி.

அனார்கலி :—அப்படியே செய்கிறேன்.

பஜாஜி :—அதிகநேரம் தங்கி விட்டாய்; சென்று வா. மற்றவை நாளை வைத்துக் கொள்வோம்.

அனார்கலி :—சுவாமி ! இனி நான் தங்கள் அடிமை; தங்கள் சுகமே என் சுகம்; தங்கள் கட்டளையே வேத வாக்கு. நான் சென்று வரட்டுமா ?

பஜாஜி :—சென்று வா.

[திரை விழுகிறது]

## அங்கம். 1

### காட்சி. 7

[நிகழ்ச்சி: டில்லி தர்பார்]

பாதுஷா :—மந்திரி! நம் யோசனை எப்படி?

மந்திரி :—அரசே! பஜாஜி அவ்வளவு முட்டாள் இல்லை; அவர் உயிர்த்தியாகம் செய்தாலும் செய்வாரே தவிர, ஒருபோதும்........

சேவகன் :—அரசே! தங்கள் குமாரி, நம் இளவரசி தங்களைக் காண.......

பாதுஷா :—இளவரசி என்னைப் பார்க்க வேண்டுமா?

சேவகன் :—ஆம், அரசே!

பாதுஷா :—சரி, வரச் சொல்.

[அனார்கலி வந்து தந்தையை நமஸ்கரிக்கிறாள்]

பாதுஷா :—என்ன அனார்கலி! என்ன ஆயிற்று?

அனார்கலி :—ஆவதென்ன? என் காதலர், என் துரை, என் தெய்வம், முஸல்மான் ஆகத் தயார்.

பாதுஷா :—தயாரா?........உண்மையாகவா?

அனார்கலி :—ஆம், என்ன சந்தேகம்?

பாதுஷா :—நீயே பாக்கியவதி, குழந்தாய்! உன் திருமணம் இனிதே நடைபெறும்.

மந்திரி! பஜாஜியை அழைத்து வரச் சொல்லுங்கள்.

மந்திரி :—ஆகட்டும் மகராஜ்!

[பஜாஜி வருதல்]

பாதுஷா :—பஜாஜி! உம் எண்ணத்தை அறிந்தோம், சந்தோஷம்! இப்படி அமருங்கள்.

[பஜாஜி அமர்கிருன்]

மந்திரி! நமது மத குருவை அழைத்துவரச் சொல்லுங்கள்; பஜாஜியை முஸல்மாளுகச் செய்ய ஏற்பாடாகட்டும். (பஜாஜியைப் பார்த்து) உங்கள் விருப்பப்படி எங்கள் மதத்தின் ஒழுக்கத்தை அறிந்து கொள்ளுங்கள். மந்திரியுடன் சென்று வாருங்கள்.

[மந்திரி, பஜாஜியை அழைத்துக் கொண்டு செல்கிருர்]

பாதுஷா :—அஞர்கலி! இனி நாம் அந்த சிவாஜியல்ல, அவனுக்கு மேம்பட்டவனைலும் சரி, பயமில்லே. இன்றே முகலாய சாம்ராஜ்யம் நிலேக்க ஆரம்பமாகிவிட்டது. இன்றுதான் என் எண்ணம் நிறைவேறுகிறது. அதை நீயே பூர்த்தி செய்து கொடுத்தாய். இனி எனக்குக் கவலேயில்லே. உன்னுடைய கவலேயும் ஒழிந்தது. இனி எல்லாம் உன்னுடையது. நம் சாம்ராஜ்யத்தை நீயும் பஜாஜியுமாக நீடூழி காலம் ஆண்டு அனுபவித்து வாருங்கள்.

அஞர்கலி :—(இகழ்ச்சியாக) ஆம் பாவா! இவர் சம்மதிக்காமல் இருந்திருப்பாரேயாளுல், என் கதி என்ன ஆகும்? இந்நேரம் என் தலேயைத்தான் வைத்துக்கொஞ்சிக் கொண்டிருப்பீர்கள். இல்லேயா?

பாதுஷா :—அப்படிச் செய்ய என் மனம் வருமா? உனக்காகத் தானே உயிர் வாழ்கின்றேன். அவ்விதம் சொன்னதால்தானே, பஜாஜி முஸல் மான் ஆனன். இதெல்லாம் ராஜதந்திரம்.

அனர்கலி :—நல்ல ராஜதந்திரம்! நிரபராதியான ஒருவரை சிறையில் வைத்திருப்பது; மனிதர் களுக்கு உள்ள சுதந்தரத்தைப் பறிப்பது; ஆள் வோனுக்கு அனைவரும் அடிமையாக வாழ்வது; இதெல்லாம் ராஜதந்திரம் தானே. சரி, நேரமா கிறது; நான் வருகிறேன்.

பாதுஷா :—சென்று வா.

[அனர்கலி செல்கிருள். திரையும் விழுகிறது]

## அங்கம். 2

### காட்சி. 1

[இடம் :—அந்தப்புரம். நிகழ்ச்சி: பஜாஜி முஸல்மானகி அனர்கலியை மணம் புரிந்து காதல் கடலில் மூழ்கி, நாழிகை நாளாகி, நாட்கள் மாதமாகி, மாதங்கள் வருடத்தை எட்டிப் பார்க்கிறது. ஓர் நாள்]

அனர்கலி :—நாதா! தாங்கள் ஏன் சில சமயங்களில் மௌனமாகவே இருக்கிறீர்கள்?

பஜாஜி :—அனர்கலி! எனக்கு எதற்கு மௌனம்? நான் என்ன தபசியா, அல்லது முனிவனா?

அனார்கலி:—இல்லை, நாதா! நான் நன்றாகக் கவனித்து வருகிறேன். ஒருசமயம் தேகநிலை காரணமாக இருக்கலாம், என்று கூட எண்ணினேன். வைத்தியரை வேண்டுமானால் அழைத்து வரச் சொல்லலாம்.

பஜாஜி:—இல்லை, வேண்டாம். அவன் வந்தால் ஏதேனும் பைத்தியமாக உளறுவான்.

அனார்கலி:—பின், என்னிடம் சொன்னால் என்ன?

பஜாஜி:—அன்பே! யாதொரு விசேஷமும் இல்லை. நான் மௌனமாக இருப்பதுபோல் உனக்குத் தோன்றுவதற்கு, நான் என்ன செய்யலாம்? நீயோ என்மேல் உள்ள ஆசையால் விடாப்பிடியாகக் கேட்கிறாய்.

அனார்கலி:—நாதா! வருந்த வேண்டாம். நான் தெரியாமல் கேட்டுவிட்டேன். அதிருக்கட்டும், தாங்கள் என்னை எங்கெல்லாமோ அழைத்துக் கொண்டு போவதாகச் சொன்னீர்களே! இதுவரை என்னை எங்கேயுமே அழைத்துச் செல்லவில்லையே!

பஜாஜி:—பாபம், உனக்கு இந்த அரண்மனை பிடிக்க வில்லையா?

அனார்கலி:—உங்களுடன் சேர்ந்து வெளியிடங்களைப் பார்க்கலா மென்றுதான்.

பஜாஜி:—அதற்கு அவசரமென்ன? நம் நாடே நமக்குத் தெரியாதே; அப்படி இருக்க வெளியிடங்களைப் பார்ப்பது எப்படி?

[ஒரு தாதி ஓடிவருகிறாள்]

தாதி :—அம்மா! பாதுஷா தங்களை அழைக்கிறார்.

அனார்கலி :—(பஜாஜியைப் பார்த்து) நான் சென்று வரட்டுமா?

பஜாஜி :—நானும் உலாவி வருகிறேன்.

[இருவரும் செல்லுதல்]

## அங்கம். 2

### காட்சி. 2

[இடம் :—நந்தவனம். நிகழ்ச்சி :—பஜாஜி எதையோ சிந்தித்தவாறு உலாவுகிறான்]

பஜாஜி :—(தனக்குள்) நான் ஒரு துரோகி! அனார்கலி துரோகியாகாமல் இருக்க, நானல்லவோ துரோகியாக மாறிவிட்டேன். தாய்நாட்டுப் பற்றுடனே வாழ்வு, என்றெல்லாம் நினைத்திருந்தேன். எங்கிருந்து வந்தது இந்தக் காதல்? அன்று பத்மாஜி நம்மைக் காதலித்தாள். ஆனால் என் வீர வெற்றிக்குப் பின் காதல் என்றெல்லாம் சொல்ல, நான் இன்று ஒரு விரோதியின் மகள், முஸ்லிம் மகள், குலத்துரோகியாக வேண்டியவளைக் காதலிக்கிறேன். நன்று நன்று. என்ன, எண்ணாத எண்ணமெல்லாம், என் மனம் எண்ணுகிறது. செய்! அனார்கலி உத்தமி. அவளுக்காகத் தான், நான் முஸல்மான் ஆனேன். மேலும் அவள் ஒருதேச பக்தை. அவளும் நானும் சேர்ந்து தேசவிடுதலைக்குப் பாடுபட கங்

கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சத்ரபதி சிவாஜி மன்னர், துரோகி என்று நினைத்தால்?.... .......செய்! ஒருக்காலும் அப்படி நினைக்க மாட்டார். இது ஒரு ராஜதந்திரம் என்றுதான் அவர் எண்ணுவார்.]

[ஒரு பாட்டு கேட்கிறது. கூர்ந்து கவனிக்கிறான் பஜாஜி. ஒரு சந்நியாசி பாடிக் கொண்டே வருகிறார்]

பஜாஜி :—என்ன, இந்த சந்நியாசி பாடுவது என் உள்ளத்தை எரிக்கிறதே! அவரை அழைத்து யார் என்று விசாரிப்போம். அப்படியே என் பூர்வாங்கக் கதையைச் சித்தரிக்கிறதே, அந்தப் பாட்டு. (கையைத் தட்டி) ஐயா! இப்படிக் கொஞ்சம் வாருங்கள்.

சந்நியாசி :—(அருகில் வந்து) ஜே, ரணசண்டி! சுபம் அருள்வாயாக!

பஜாஜி :—சுவாமி! தாங்கள் யார், எந்த ஊர், எங்கே செல்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்கலாமா?

சந்நியாசி :—தெரிவிக்கலாம். முதலில் தாங்கள் யார் என்பதைத் தெரிவித்தால் எனக்கு மிகுந்த நலமாயிருக்கும்.

பஜாஜி :—(வருத்தத்தோடு) சுவாமி! நான் ஒரு மகாராஷ்டிரன். சிவாஜி என்பவரைத் தாங்கள் அறிந்திருக்கலாமே!

சந்நியாசி :—ஆம்.

பஜாஜி :—அவரது சேனைத் தலைவன் நான்தான்.

சந்நியாசி :—உன்னைப் பார்த்தால், மகாராஷ்டிர னுகவோ, சிவாஜியின் சேனைத் தலைவனுகவோ தெரியவில்லையே!

பஜாஜி :—சுவாமி! மன்னிக்க வேண்டும். இன்று நான் முகம்மதியனுக இருக்கிறேன்.

சந்நியாசி :—(ஆச்சரியத்துடன்) என்ன! முஸல் மானு? (கோபமாக) மதம் மாறிய பாவியா நீ? உன்னிடம் பேசுதல் கூடாதே. வழிவிடு, நான் போகிறேன்.

பஜாஜி :—சுவாமி! கோபம் வேண்டாம். யாராய் இருப்பினும் ரக்ஷிப்பது தங்கள் போன்றவர் களின் கடமை யல்லவா? எளியேனைக் காப் பாற்றுங்கள். சுவாமி! தாங்கள் பாடிய பாட்டு என் பூர்வீகச் சரித்திரத்தைக் கூறுவதாக இருந்தது. அந்த ஆவல், தங்களை யார் என்று அறியத் தூண்டிற்று. தயை செய்து தாங்கள் யார் என் பதைக் கூறலாமா?

சந்நியாசி :—(கோபமாக) நான் யார் மீது முழு நம் பிக்கையோடு இருந்தேனே, அந்த சேனுதிபதி நீ. இப்பொழுது நான் யார் என்பது தெரிந்ததா?

பஜாஜி :—(ஆச்சரியத்துடன்) ஆ! யார்? சிவாஜி மகாராஜ்!

சிவாஜி :—ஆம், நான் தான்.

பஜாஜி :—மன்னு! இது என்ன வேஷம்? இப்படி வருவதை நானு பார்த்துச் சந்தோஷிக்க வேண் டும்?

சிவாஜி :—பஜாஜி! இப்படி வராவிட்டால் சிறிது காலத்தில் பாதுஷாவாகப் போகும் தங்களைக் காண முடியுமா?

பஜாஜி :—ஐயோ, தாங்கள் கூறுவது என் உடலில் ஈட்டி பாய்வதுபோல் அல்லவா இருக்கிறது.

சிவாஜி :—பிறந்த நாட்டைக் காட்டிக் கொடுக்க வந்த துரோகி!

பஜாஜி :—(அழுதவாறு) அரசே! தாங்கள் அவ்விதம் சொல்லக்கூடாது. உண்மையான உள்ளத்தோடு ரணசண்டியின்மேல் ஆணையாக, நான் அவ்விதம் உள்ளவன் அல்ல. (விம்மல்) அரசே! என்னை மன்னித்து, சேர்த்துக்கொள்ள வேண்டும்

சிவாஜி :—பஜாஜி! நீ சுயகாரியன், மோசக்காரன், துரோகி என்றெல்லாம், நம் வம்சத்தவர் நினைந்து நினைந்து வருந்துகிறார்கள். உன் பிரிவுக்காக ஜீஜிபாய் கண்ணீர் விட்டுக் கதறுகிறாள். மகாராஷ்டிர ரத்தம் உன்னிடம் இருக்குமானால், இப்போதே என்னுடன் வரவேண்டும்; பின்புதான் மன்னிப்பெல்லாம்.

பஜாஜி :—(அழுதவாறு) மன்னா!

சிவாஜி :—என்ன செய்யப் போகிறாய்? வரமுடியாதென்கிறாயா?

பஜாஜி :—அப்படி அல்ல, என் பிரிய!

சிவாஜி :—(ஏளனமாக) என்ன! காதலியை விட்டுப் பிரிகின்றோமே! பாவம், வருந்துவாளே! ஏதாவது

சாக்குப் போக்குக் காட்டிவிட்டு வருவோம் என்று நினைக்கிறாய்? அதெல்லாம் பின்னால் பார்த்துக்கொள்வோம், வா செல்வோம். (பஜாஜியின் கையைப் பிடித்து அழைத்துச் செல்கின்றார் சிவாஜி)

[இருவரும் செல்லல். திரையும் விழுகிறது]

## அங்கம். 2

### காட்சி. 3

[இடம் :—அந்தப்புரம், அனார்கலி படுக்கையறை]

அனார்கலி :—ஏன் இன்னும் அவர் வரவில்லை? மணியும் ஒன்பது ஆகிவிட்டதே! (தாதியைப் பார்த்து) ரகிமானு! அவர் எங்கேயடி சென்றார்?

ரகிமானு :—தோட்டத்திற்குத் தான் அம்மா, போவதாகச் சொன்னார்.

அனார்கலி :—சரி வா; சென்று பார்த்து வரலாம்.

[விளக்குகளை எடுத்துக் கொண்டு தோட்டம் முழுவதும் தேடியும் பஜாஜியைக் காணோம்]

அனார்கலி :—அவர் வேறெங்கே போயிருப்பார்?

ரகிமானு :—ஒருவேளை, அந்த சிவாஜியின் ஆட்கள்......?

அனார்கலி :—ஒருக்காலும் இருக்காது.

ரகிமானு :—பாவாவுடன் பேசிக் கொண்டிருக்கலாம்.

அனார்கலி :—வா, சென்று பார்த்துவரலாம்.

[இருவரும் செல்கிறார்கள்]

## அங்கம். 2

### காட்சி. 4

[இடம் :—அரண்மனை. நிகழ்ச்சி : பாதுஷா படுத்திருக்கிறார். அனார்கலியும் அவள் தோழி ரகிமானும் உட்செல்கிறார்கள்.]

பாதுஷா :—குழந்தையா, என்ன இந்த நடு நிசியில்?

அனார்கலி :—பாவா! அவர்! அவரைக் காணோம்.

பாதுஷா :—காணோமா? எங்கு சென்றிருப்பான் ?

அனார்கலி —தோட்டத்திற்குத்தான் சென்றார். அங்கெல்லாம் தேடியாகிவிட்டது.

பாதுஷா :—பின், ஓ! ஒருக்கால் அந்த சிவாஜியின் ஆட்கள்.......

அனார்கலி :—இருக்கவே இருக்காது.

பாதுஷா :—சரி. போய் படுத்து உறங்கு; அவன் வந்து விடுவான். அப்படி அவன் வரவில்லையானல் நாளைக் காலை நம் ஆட்களைவிட்டு அவன் எங்கிருக்கிறான் என்று அறிந்து வருகிறேன்.

[அனார்கலி செல்லுதல்]

## அங்கம். 2

### காட்சி. 5

[இடம் :—தர்பார்]

பாதுஷா :—யாரங்கே ?

[சேவகன் ஒருவன் வந்து வணங்கி நிற்கிறான்]

பாதுஷா :—அடே! சேனைத் தலைவனை உடனே அழைத்து வா.

சேவகன் :—அப்படியே மகராஜ்!

[சேவகன் சென்று சேனைத் தலைவனை அழைத்து வருகிறான்]

பாதுஷா :—(சேனாதிபதியைப் பார்த்து) நம் பஜாஜி நேற்றிலிருந்து காணப்படவில்லை. அவன் எங்கிருக்கிறான் என்று அறிந்துவர, நம் ஆட்களை அனுப்பு.

சேனாதிபதி :—அப்படியே.

[திரை விழுகிறது]

## அங்கம். 2

### காட்சி, 6

[நிகழ்ச்சி :—பஜாஜியை எங்கும் தேடியும் காணாமல் சிவாஜியின் அரண்மனையை அடைகிறான் சேனாதிபதி. மாறு வேஷத்துடன் அங்கு சில நாள் தங்கி, பஜாஜி இருப்பதை அறிந்துகொண்டு டில்லி திரும்புகிறான். இடம் :—தர்பார்]

[சேனாதிபதி, பாதுஷாவை வணங்கி நிற்கிறான்]

பாதுஷா :—என்ன! அவன் எங்கிருக்கிறான்?

சேனாதிபதி :—சிவாஜியின் அரண்மனையில்.

பாதுஷா :—என்ன! சிவாஜியின் அரண்மனையிலா? துரோகி, சண்டாளன். அவன் முஸல்மானாகி மாறியும், வெறுக்காமல் அவனையும் சேர்த்துக் கொண்டு விட்டார்களா? சரி இருக்கட்டும். இனி சும்மா விட்டால் பின்பு பெரும் கெடுதல் வரும். (சேனாதிபதியைப் பார்த்து) நம். சேனைகளைத்

தயார் செய். மலை நாட்டின் மேல் படை எடுக்க ஏற்பாடுகள் துரிதமாக நடக்கட்டும்.

[யுத்தத்திற்கு எல்லோரும் தயாரானார்கள். சேனையும் மலைநாட்டை நோக்கிப் புறப்பட்டது]

## அங்கம். 3

### காட்சி. 1

[இடம்:—சிவாஜியின் அரண்மனை]

ஜீஜிபாய்:—(சிவாஜியின் தாயார்) பஜாஜி! ஏன் நீ மதம் மாறினாய்? எங்களை எல்லாம் மறக்க உனக்கு மனம் துணிந்ததா?

பஜாஜி:—இல்லை அம்மா! அந்த அனார்கலி .....

ஜீஜிபாய்:—என்ன அனார்கலி! அவள் யார்?

பஜாஜி:—பாதுஷாவின் மகள்.

ஜீஜிபாய்:—பாதுஷாவின் மகளா! நன்று. ஒரு பெண்ணுக்காக உன் சுதந்தரம், நாட்டின் விடுதலை எல்லாம் மறப்பதா? நன்றாயிருக்கிறது உன் கொள்கை.

பஜாஜி:—மன்னிக்க வேண்டும். என் தேசப் பற்றை யார் வந்தாலும் மாற்ற முடியாது. ஆனால் அவள்...அனார்கலி, முஸ்லிம் பெண்தானே தவிர, என் ஆருயிர். உண்மையில் அஞ்சா நெஞ்சம் படைத்த பெண். தகப்பனின் கொள்கையில் பற்றில்லாதவள். நாங்கள் இருவரும் சேர்ந்தே முகலாய சாம்ராஜ்யத்திற்கு உலை மூட்ட எண்ணி

னேம். ஆனல், அதற்குள் நம்மன்னர் சிவாஜி, என்னை அழைத்து வந்து விட்டார்.

ஜீஜிபாய் :—போனதை நினைத்து என்ன செய்வது? இனியாகிலும் இப்படி சிக்கிக் கொள்ளாமல் தாய் நாட்டின் சுதந்தரத்துக்காகப் பாடுபடு.

பஜாஜி :—ஆகட்டும்.

ஜீஜிபாய் :—பத்மாஜிக்கு உன் நினைவுதான்.

பஜாஜி :—பத்மாஜி.......ஆ.......நான் முசல்மானுக மாறியதில் அவளுக்கு வருத்தமாய் இருக்குமே.

ஜீஜிபாய் :—இல்லை. பஜாஜி! நீ முசல்மானுக மாறிய விஷயமே அவளுக்குத் தெரியாது.

பஜாஜி :—தெரியாதா!

ஜீஜிபாய் :—ஆம்! தெரியவே தெரியாது. நீ இன்னும் சிறையில்தான் இருக்கிருய் என்று அவள் நினைத்திருக்கிருள். நாங்களும் அவளுக்கு நீ சிறையிலே இருப்பதாகச் சொல்லி இருக்கிரேம்.

பஜாஜி :—நல்லது—சிறுவயது முதல் என்னையே நம்பி யிருக்கும் அவ்ளுக்கு அது தெரிந்தால்........

ஜீஜிபாய் :—கவலைப்படாதே! அவளுக்குத் தெரியவே தெரியாது.

பஜாஜி :—அவள் என்னை வெறுக்க மாட்டாளே?

ஜீஜிபாய் :—ஒருக்காலும் வெறுக்க மாட்டாள். தினசரி உன் நினைவாகவே இருக்கும் அவள், உன்னை எப்படி வெறுப்பாள்?

பஜாஜி :—நல்லவேளை! நான் இன்று முதல் நிம்மதியாக இருப்பேன்.

ஜீஜிபாய் :—நிம்மதியாகவா இருப்பாய்! இருப்பாய்! இருப்பாய். நாளை மறு தினம்.......

பஜாஜி :—நாளை மறு தினம்........நாளை மறு தினம் என்ன ?

ஜீஜிபாய் :—என்னவா ?.......இன்னும் சிவாஜி சொல்லவில்லையா.

பஜாஜி :—என்ன அம்மா! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே.

ஜீஜிபாய் :—விளங்குமா ? விளங்காதுதான். பத்மாஜிக்குத் திருமணம் செய்யப் போகிறோம். தெரியுமா ?

பஜாஜி :—திருமணமா ? பத்மாஜிக்கா ?

ஜீஜிபாய் :—ஆம்.

பஜாஜி :—யார் மாப்பிள்ளை ?

ஜீஜிபாய் :—யாரா ? நீயேதான்.

பஜாஜி :—நானா !

ஜீஜிபாய் :—ஆம்.

பஜாஜி :—உண்மையாகவா ?

ஜீஜிபாய் :—உண்மையாகத்தான். அதிலென்ன சந்தேகம்? சரி, நீ களைத்திருக்கிறாய். மற்றவைகளை நாளைப் பேசிக்கொள்வோம். சென்றுவா.

[பஜாஜி செல்லுதல்]

[பஜாஜிக்கும் பத்மாஜிக்கும் திருமணம் இனிதே நடைபெற்றது; இரண்டு மாதங்களும் சென்று மறைந்தன.]

[சமயம் பார்த்திருந்த டெல்லி பாதுஷா சேனையுடன் கோட்டைக்குள் பிரவேசிக்கிருன். யுத்தம் மும்முரமாக நடக்கிறது.]
[நிகழ்வு—யுத்த களம்; மாலை நேரம்.]

## அங்கம். 3
## காட்சி. 2

அனர்கலி :—வேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள் பாவா,

பாதுஷா :—கேட்பதென்ன? அந்த துரோகி, நய வஞ்சகன். (பல்லைக் கடித்துக்கொண்டு)

அனர்கலி :—யார்? அவரா துரோகி, நயவஞ்சகன்! (ஏளனமாக நகைத்து)

பாதுஷா :—என்ன நகைக்கிருயா?

அனர்கலி :—ஆம், நகையாமல் என்ன செய்வது? தாய் நாட்டின் சேவையையே முக்கியமாகக் கொண்ட ஒருவரை சிறை செய்தீர்களே! அது நய வஞ்சகம். ஒரு புண்ணிய புருஷரை மதம் விட்டு மதம் மாற்றினீர்களே, அது துரோகம். தூண்டில் போடுபவன் ஒரு பூச்சியைக் காட்டி மீனை தூண்டில் சிக்க வைப்பதுபோல், என்னைக் காட்டி அவரை மோசம் செய்தீர்கள். விளக்கு ஒளியை பழம் என்று நினைத்து அந்த நெருப்பில் விழுந்த விட்டிலைப்போல், அவர் என்மேல் உள்ள காதலால் உங்கள் வலைக்குள் அகப்பட்டார். சுதந்தரமே ஜீவன், யுத்தமே அதன் லட்சியம் என்றிருந்த அவரை தேசத் துரோகி யாக்கியது

மன்னியில், அவரை நயவஞ்சகன், துரோகி என்றெல்லாம் சொல்ல எப்படி மனம் வந்தது? சற்று சிந்தியுங்கள் பாவா.

பாதுஷா:—அனார்கலி, எனக்கா புத்தி சொல்கிறாய்?

அனார்கலி :—பாவா! நான் உங்களைவிட சிறியவள் தான். ஆனாலும் அவர் குற்றமற்றவர். அவர் அப்படி குற்றம் செய்திருப்பினும் அதற்குக் காரணம் தாங்கள். இல்லை........நான் தான்.

பாதுஷா :—அனார்கலி! என்ன சொன்னாய்? குற்றவாளி நானா?

அனார்கலி :—ஆம், நீங்களேதான். நம் முகலாய வம்சத்திற்கே அழியாத பழியைத் தேடிவிட்டீர்கள். ஒரு அன்னிய மதத்தினனை நம்மதத்தில் சேரும்படி வற்புறுத்தியது முதல் குற்றம். நம் மதம் சற்குணம் நிறைந்த முசல்மான் மதம். பிறரைத் துன்புறுத்தச் சொல்லுகிறதா? உங்கள் நலனுக்காக, தனிப்பட்ட ஒரு மனிதன் நலனுக்னுக்காக, காசாசை கொண்டு காசினியை ஆள மற்றவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதா?

பாதுஷா :—என்ன சொன்னாய்? துரோகி! நீயோ என் மகள். இல்லை, எனக்காக மற்றவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கிறேனா? இதோ பார் உன்னை என்ன செய்கிறேன். நீ முதலில் ஒழிந்தால்தான், என் எண்ணம் நிறைவேறும்.

[கத்தியால் அனார்கலியை குத்துகிறான்.]

பஹாஜி :—அடே சண்டாளா! என்ன காரியம் செய்தாய்........யாரங்கே? மாட்டுங்கள் விலங்கை. பாதுஷா! இப்போது தெரிந்ததா? நாட்டாசை

பிடித்த பேயே! மகளென்றும் பாராமல் கத்தியால் குத்தினயே.''

ஆ! அனர்கலி! நீ எங்கே வந்தாய்?........சண்டாளன், படுபாவி....குத்திவிட்டானே........இந்த முடிவைக் காணவா, நான் யுத்த களம் வந்தேன். வெற்றி வீரனுகத் திரும்பும் எனக்கு, இந்த சோகம் வேறேயா?

[உயிர் இழக்கும் தறுவாய்]

அனர்கலி:—நாதா! சென்றதை மறங்கள். தாங்கள் பத்மாஜியை மணந்து கொண்டதை நான் அறிவேன். என் தங்கை பத்மாஜியுடன் தங்கள் வாழ்வு நல்வாழ்வாகுக! நான் பாவி; புனிதமான உங்களை மதம் மாற்றினேன்; அதன் பலன் எனக்குக் கிடைத்துவிட்டது. என் தந்தை வயதானவர், அவரை துன்புறுத்தாதீர்கள்.

பஜாஜி:—அனர்கலி! இன்னுமா இரக்கம்? வஞ்சகன், கொலைபாதன்! யுத்த வெறி கொண்ட ராட்சதன். உனக்காக இவன் உயிர்போகாமல் இருக்கும், ஆனல் உயிர் உள்ள மட்டும் என் கைதி.

[பஜாஜி கண்ணீர் வடிக்கிருர். அனர்கலி உயிர் பிரிகிறது.]

## அங்கம். 3

## காட்சி. 3

சிவாஜி :—பஜாஜி! இன்றுதான் என் மனம் குளிர்ந்தது.

பாதுஷா :—சிவாஜி மகராஜ்! என்னை விடுதலை செய்யுங்கள், நாம் ஒத்துப்போகலாம். ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளலாம்.

சிவாஜி :—பஜாஜி! நாட்டாசை இல்லாத நாம் டெல்லிக் கோட்டையை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறோம்? பாதுஷாவை விடுவித்து விடு.

பஜாஜி :—தங்களின் நோக்கம் அதுவானால் சம்மதம்; விடுதலை செய்கிறேன்.

[பாதுஷா விடுவிக்கப்படுகிறான்.]

## அங்கம். 3

## காட்சி. 4

பத்மாஜி :—நாதா! தாங்கள் எவ்வளவு காலம் முசல்மானாக இருந்தீர்கள்?

பஜாஜி :—நான் முசல்மானாகவில்லை. நம் நாட்டின் விடுதலைக்காக, ஒரு திருவிளையாடல் நிகழ்த்தினேன். முசல்மானாக ஆனேன்....அனார்கலி பரிசுத்தம் வாய்ந்தவள். அவள் விருப்பமும் நிறை

வேறியது. எனது லட்சியமும் கைகூடியது. அனர்கலி என்பால் கொண்ட அன்பினுல்தான், நான் பாதுஷாவின் அரண்மனையிலிருந்து தப்ப முடிந்தது. இல்லையேல் இந்த சுகவாழ்வு அன்றே முடிந்து போயிருக்கும். அன்று இரவு........, ஆ.........

பத்மாஜி :—எந்த இரவு? நாதா!

பஜாஜி :—அனர்கலி என்னைக் காணவந்தாள். அவளின் வீர மொழிகள் என்னை காதல் கடலில் கொண்டு சேர்த்தன. அன்று 'நாம் இருவரும் நாட்டின் சேவைக்குப் பாடுபடுவோம். தங்களின் சுகமே என் பாக்கியம்' என்று..........

பத்மாஜி :—அன்றிரவு முடிவுகட்டி விட்டீர்களா!

பஜாஜி :—ஆம்! அவள் என்னைத் தப்பிவிக்கப் பார்த்தாள்; முடியவில்லை. அந்தச் சண்டாளன் பாதுஷா, அவள் என்னுடன் பேசியதை எப்படியோ அறிந்துகொண்டான். நான் மதம் மாறினுல் அவனுக்குத் தொந்தரவு இருக்காது என்று எண்ணினுன்.

பத்மாஜி :—அன்றே பாதுஷாவுக்கும் தெரியுமா? நல்லவேளை, தங்களை கொலைசெய்ய உத்தரவிடாமல் மதம் மாறும்படி உத்திரவிட்டானே! அதுவே போதும்.

பஜாஜி :—ஆம், அன்று எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தாள் அனர்கலி.

பத்மாஜி :—அவள் உத்தமியே..........

பஜாஜி :—ஆம்! அந்த உத்தமியைத்தான், பாவி, அவள் தகப்பன் பாதுஷா, கத்தியால் குத்திக் கொன்ருன். யுத்த களத்தில் எவ்வளவோ சொல்லியும் கேளாத சண்டாளன், அவளை தொலைத்தால்தான் என்னையும் தொலைக்கலாம் என்று நினைத்தான் போலும்! ஆனால்.......அவள் மடிந்தாள். நான்..............

பத்மாஜி :—நாதா! என்ன, சித்தப்பிரேமை கொண்டவர்போல் இருக்கிறீர்கள்.

பஜாஜி :—இல்லை பத்மா!.......அவள்.......இறக்கும்போதுகூட 'பத்மாஜியுடன் இனிதே காலம் கழியுங்கள். மதம் மாற்றியதற்கு தக்க தண்டனை அடைந்தேன்' என்று சொல்லும்போது..........

பத்மாஜி :—என்னைக்கூட அவளுக்குத் தெரியுமா?

பஜாஜி :—தெரியும், நன்ருகத் தெரியும்.

பத்மாஜி :—புனிதவதி, அவளைத் துரோகம்செய்ய தங்களுக்கு எப்படி மனம் வந்தது? அவளிடம் கூடச் சொல்லாமல் வந்துவிட்டீர்களே!

பஜாஜி :—அன்று நான் சொல்லியிருந்தால் அவளும் என்னுடன் வந்திருப்பாள். ஆனால் மகராஜ் சிவாஜியின் ஆணை வேறு விதம்.

பத்மாஜி :—அவள் உங்களுடன் வந்திருந்தால் இன்று இறந்திருக்க மாட்டாளே.

பஜாஜி :—சென்றதைக் குறித்து வருந்துவதில் பயனில்லை. ஆனால் அன்று இரவு "பஜாஜி! இந்த உடல், நீர் நினைப்பதுபோல், பகைவனின் உடலாக இருக்கலாம். ஆனால், உயிர்....................

“நான் தங்களின் அடிமை; இந்த உடல் பொருள் ஆவி மூன்றும் உங்களுடையது. தங்களின் நோக்கமான தேசத் தொண்டிற்கு நான் தியாகம் செய்யத் தயாராய் இருக்கிறேன்” என்று சொல்லிய வாக்கியங்கள், இன்றும் என் மனதை விட்டகலவில்லை. அவள் அன்று சொன்னது போல், எனக்காகவே உயிர் துறந்தாள். அவள் என் ஜீவன்! என் அன்புத் தெய்வம்!

**ஜெய் ஹிந்த்!**

# நமது புது வருஷ வெளியீடு

●

# மனிதன்

ஆசிரியர் : ஆர். ராமனுதன்

காட்டில்
வாழ்ந்த
மனிதன்
எண்ணி
எண்ணி
சிந்தனையில்
உயர்ந்து
நாட்டை
அமைத்து
நகரை
அமைத்து
இன்று
வாழ்கிறுன்

அது எப்படி ?

குறிப்பு : சர்வதாரி௵ சித்திரை மீ 1௳ எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.











**சோவியத் அரசாங்கம்**
'S. ஷண்முகம்'
விலை ரூ. 1—8—0

**மரகதம்**
விக்டர் ஹியூகோ (அச்சில்)

**விஞ்ஞானமும் சமூகமும்**
'ப. கோதண்டராமன்'
விலை ரூ. 3—8—0

**பாசவலை** 'ய. ல.'
விலை ரூ. 1—8—0

**கலையும் கலை வளர்ச்சியும்**
'வ. ரா.'
விலை ரூ. 2—0—0

---


## கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம் : புதுக்கோட்டை ஸ்டேட்.

M. R. PRESS, R. C. PURAM.